DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C.No.353/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-4 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.மாரிமுத்து |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ.ராமு |
| Village | : | கடம்பனேந்தல் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1 died. A3 prsent. A2 absent U/s.317 Cr.P.C petition filed heard and allowed.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 14.03.2024

---

**முதல் விசாரணை**

1. நான் கடம்பனேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். எதிரிகளை எனக்கு தெரியும்.

2. சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவில் இல்லை அ.சா.1 ற்கும் 1 வது எதிரிக்கும் பாதை பிரச்சனை இருந்து வந்தது. கண்மாய்கரை கிட்ட சண்டை வந்து ஈஸ்வரனும், கண்ணனும் அ.சா.1 ஐ கீழே தள்ளிவிட்டார்கள். ஊரில் உள்ள யாரும் அவரை துாக்கி விட வரவில்லை நான் சென்று அவரை துாக்கி ஆட்டோவில் தொண்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்துச் சென்று பின்னர் திருவாடானை அரசு மருத்துவமனைக்கு கூட்டி வந்து அதன்பிறகு ஆம்புலன்சில் இராமநாதபுரம் அரசு மருத்தவமனைக்கு கொண்டு சென்ற விவரம் எனக்கு தெரியும். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நீதிமன்றத்திற்கு என்னை அ.சா.1 தான் கூட்டி வந்தார். எனக்கு யாரும் சொல்லிக்கொடுக்கவில்லை நானே தான் சொல்லுகிறேன். எனக்கு காது கேட்குமா என்றால் சத்தமா சொன்னால் கேட்கும்.

2. சண்டை நடந்ததாக சொல்லும்போது நான் வீட்டில் இருந்தேனா என்றால் நான் இருந்த இடத்தில் இருந்து பார்த்தால் சம்பவ இடம் நன்றாக தெரியும். எனக்கும் அ.சா.1 ற்கும் ஏற்கனவே பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை.

3. என்னை போலிசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் சண்டை நடந்த சமயத்தில் போலிசார் வந்தபோது என்னை விசாரித்தார்கள். அ.சா.1 ஐ நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் நான் தான் அ.சா.1 ஐ திருவாடானை அரசு மருததுவமனைக்கு அழைத்து வந்தேன் என்றால் சரிதான்

4. அ.சா.1 எனக்கு உறவினரா என்றால் எனது அத்தை மகள் ஆவார். எனக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும் அ.சா.1 எனது உறவினர் என்பதால்

அ.சா.1 என்னை நீதிமன்றத்திற்கு கூட்டி வந்து என்னை சாட்சி சொன்னதின்பேரில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல,

(ஒம்/–S.பிரசாத்)
நீதித்துறை நடுவர்,
திருவாடானை.